Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

43

# ஹலபேடு கோயில்களில் சிற்பக்கலை சிறப்பம்சங்கள்

**செ. ஆர்த்திகா & வீ. கோபிநாத்**

**உளவியல் துறை, பூ. சா. கோ அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி,கோவை**

20bpy010@psgrkcw.ac.in, gobinath@psgrkcw.ac.in

**ஆய்வுச் சுருக்கம்:**

இந்த கட்டுரையில் இந்தியாவின் தென் மாநிலங்கள் ஒன்றான கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹலபேடு என்னும் ஊரில் உள்ள ஹோய்சலேஸ்வரர் கோயிலின் வரலாற்றுச் சிறப்பை பற்றி அறிந்து கொண்டு கோயிலின் சிற்பங்கள் புலப்படுத்தும் கலை அம்சங்களையும், நுணுக்கங்களையும், அறிவியலையும், பாலின சமத்துவத்தையும் தெரிவிப்பதே இந்த ஆய்வு கட்டுரை.

**ஆய்வு நோக்கம்:**

ஹோய்சலேஸ்வரர் கோயிலில் சிற்பங்களின் வரலாறும் அது வெளிப்படுத்தும் அறிவியல் மற்றும் பாலின சமத்துவத்தையும் ஆராய்வதே கட்டுரையின் நோக்கம்.

**கடவுச்சொற்கள்:** கர்நாடகா - ஹோய்சலேஸ்வரர் கோயில் - வரலாறு – சிற்பங்கள் – அறிவியல்- பாலின சமத்துவம்.

**முன்னுரை**:

வரலாற்று காலத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்து சிற்பக்கலை வளர்ந்து வருகின்றன . மனித நாகரீகத்தையும் அதன் வளர்ச்சி கூறுகளையும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் சிற்பக்கலை இன்றியமையாத ஒன்றாக உள்ளது. நாடுகளின் தொன்மையான வரலாற்றை அம்மக்கள் வளர்த்த சிற்பக்கலை வழியாகவே பெரிதும் அறிய முடிகிறது. மனிதனின் படைப்புகளில் காலத்தால் அழியாமல் வாழக்கூடிய கலை படைப்பு சிற்பமாகும் . தமிழகத்தில் மட்டுமல்ல பாரதம் முழுவதும் தொன்மையான கோயில்கள் மாநிலம் தோறும் இருக்கின்றன . கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் விளங்கவில்லை. காலம் தோறும் நடந்த ஆட்சி மாற்றங்களை, வரலாற்று சுவடுகளை தன்னகத்தை கொண்டுள்ளன . இயல் , இசை , நாடகக் கலைகளை வளர்த்த மையங்களாகவும் ஓவிய, சிற்பக்கலைக்கூடங்களாகவும் விளங்கின நம் கோவில்கள்.

அவ்வகையில் கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹோய்சலேஸ்வரர் கோயில் தனக்கென தனிச்சிறப்பு கொண்ட மிகப் பழமையான கோயில்களில் ஒன்றாகும். அந்த ஹோய்சலேஸ்வரர் கோயிலைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.




ஹலபேடு கோயிலின் கட்டுமானம்:

ஹலபேடு கோயில் ஒரு சிவன் கோயில் ஆகும். அக்கோயில் உள்ள சிற்பங்கள் அனைத்தும் சோப்பு கற்கள் என்னும் ஒரு வகை கற்களால் கட்டப்பட்டுள்ளன .அவற்றில் பெரும்பாலானவை பன்னிரண்டாம் நூற்றாண்டை சேர்ந்த வாழ்க்கை முறையை சித்தரிக்கின்றன. அவை அனைத்தும் நம்மை ஆச்சரியப்படுத்தும் வகையில் செதுக்கப்பட்டுள்ளன.

ஹலபேடுவின் நந்தி சிலகைள்:



நமது இந்தியாவில் பல நந்தி சிலைகள் இருந்தாலும் அவற்றுள் ஏழு நந்தி சிலைகள் சிறப்பு வாய்ந்தவை ஆகும் அவற்றின் முதன்மையானவை ஆந்திராவில் உள்ள லேபாக்ஷியிலும், இரண்டாவது தஞ்சை பெரிய கோவிலிலும், மூன்றாவது மைசூர் சாமுண்டி மலையிலும், நான்காவது பெங்களூரில் உள்ள காளை கோவிலிலும் உள்ளது . ஆறாவது மற்றும் ஏழாவது நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கும் கோயில் ஆன ஹலபேடுவில் தான் உள்ளன . அதில் ஒரு சிலை எட்டு அடையும் மற்றொன்று ஒன்பதடி சிலையாகும்.

ஹலபேடு கோயில் சிவன் சிலைகள்:



ஹலபேடுவில் இரண்டு சிவன் சிலைகள் உள்ளன. அதில் ஒரு சிலை சாந்தளேஸ்வரரையும் மற்றொன்று ஹோய்சலேஸ்வரரையும் குறிக்கும் . அச்சிவன் சிலையில் சாந்தலேஸ்வரர் ஹொய்சால காலத்தின் ராணியையும், ஹோய்சலேஸ்வரர் ராஜாவையும் குறிக்கிறது. மற்றும் அக்கோவிலில் ஹோய்சலேஸ்வரருக்கு நித்தம் மூன்று முறையும்,சாந்தளேஸ்வரருக்கு ஒரு முறையும் சடங்குகள் நடைபெறும் என கூறப்படுகிறது. கோயிலின் மையத்தில் ராணி நடனமாட வட்ட வடிவ அடித்தளம் உள்ளது .அங்கு தான் ராணி நடனமாடுவார் என்றும் ராணி நடனமாடிய பிறகு அங்குள்ள சிவன்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சிலைகளுக்கு சடங்குகள் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

ஹலபேடுவில் உள்ள கோவில்கள்:




பொய்சால மன்னர் காலத்தில் மன்னன் விஷ்ணுவரதனால் பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன .அதில் மூன்று கோவில்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை . ஒன்று ஹோய்சலேஸ்வரர் கோயில் , அடுத்து பேலூர் ,மூன்றாவது சென்னகேஸ்வரர் கோயில் ஆகும். ஹலபேடு கோயில் பெரிய குளம் ஒன்றை நோக்கியபடி உள்ளது . யகாச்சி ஆற்றுக்குக் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள அணைக்கட்டு ஒன்றிலிருந்து வாய்க்கால்கள் மூலம் நீர் வழங்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

ஹலபேடு கோயில் சிற்பங்கள்:





ஹலபேடு கோயிலின் வெளிப்புறச் சுவர்கள் மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுகளை கொண்டுள்ளன. கீழ் அடுக்குகளில் யானைகள், குதிரைகள், சிங்கங்கள் போன்ற விலங்குகளின் உருவங்கள் உள்ளன. அதைத்தொடர்ந்து நடன கலைஞர்கள், மயில்கள் போன்ற சிறிய சிறிய சிற்பங்கள் உள்ளன .அதன் பிறகு திருவிழாக்கள் உட்பட அடுத்த சில அடுக்குகளில் மக்களின் அன்றாட வாழ்வில் சித்தரிக்கும் சித்தரிப்புகளை காணலாம். அடுத்ததாக அர்த்த, காம, தர்மக் காட்சிகளை சித்தரிக்கும் வெவ்வேறு சிற்பங்கள், காதல் மற்றும் சிற்றின்பம் உள்ளிட்டவற்றைக் காணலாம். அதன்பிறகு இந்து கலாச்சாரத்தின் தெய்வங்களை சித்தரிக்கும் பெரிய உருவங்களும் ராமாயணம் மகாபாரதம் என்னும் இதிகாச கதைகளின் புராண காட்சிகளையும் காணலாம்.

சிறப்புமிகு கோவர்தன கிருஷ்ணர் சிற்பம்:



பிருந்தாவனத்தில் வசிப்பவர்களையும் விலங்குகளையும் பாதுகாப்பதற்காக கிருஷ்ணர் அவரது தெய்வீக வடிவில் இடது சுண்டு விரலில் கோவர்தன மலையை உயர்த்தியதை இச்சிற்பம் சித்தரிக்கிறது. மலைக்கு கீழே தொங்கும் பாம்புகள் பூலோகத்திற்கு (பூமிக்கு) சற்று கீழே அமைந்துள்ள நாகலோகத்தை (பாம்பு நிலம்) குறிக்கிறது . குரங்கு மரத்தில் ஏறுவது போலவும் சிங்கம் குகைக்குள் நுழைவது போலவும் இந்த மலை மிகவும் இயல்பாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

சீர்மிகு கஜசம்கார மூர்த்தி சிற்பம்:



யானை வடிவில் நிலா என்ற அரக்கன் சிவனை தாக்க வந்தது. அதற்கு பாடம் கற்பிக்க சிவன் யானையின் உடலை பிளந்து, கொன்று அதன் தோலை அணிந்த சம்பவத்தை சிற்பி அழகாக சித்தரித்துள்ளதால் திறந்த வயிற்றுடன் யானை மேல்நோக்கி சிவனை பார்ப்பதை காணலாம். மேலும் அது மோட்சம் அடைந்து அமைதி அடைந்தது .கோயிலின் தெற்கு நுழைவாயிலுக்கு இடது புறத்தில் உள்ள கோயிலின் ஒரு பகுதியில் மூன்று தலை பிரம்மா அன்னம் மீது ஏறி செல்வதை காட்டுகிறது.

ஹலபேடு சிற்பங்களில் தொலைநோக்கி :



ஹலபேடுவில் ஒரு நபர் தொலைநோக்கியை பயன்படுத்தியவாறு காணப்படும் ஒரு சிற்பமும் உள்ளது. இந்த கோயில் கிபி 1120-ல் உருவாக்கப்பட்டது, அதாவது சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்பு , ஆனால் தொலைநோக்கி 1608 -ல் கண்டுபிடிக்கப்பட்டது என்று வரலாற்றுப் புத்தகங்கள் கூறுகின்றன. இதன் மூலம் பாரதத்தில் பழங்கால நாகரிகம் மேம்பட்ட தொழில்நுட்பத்தில் இருப்பதை உணரலாம். முழு செதுக்குதலையும்

பார்த்தால் இது இரண்டு வகையான கடவுள்களுக்கு இடையே நடந்த ஒரு போர்க்காட்சியை சித்தரிக்கிறது.

இரட்டைக் கோயில்களின் கருத்து:



ஹோய்சலேஸ்வரர் கோயில் இரட்டை கோயில்கள் ஆகும் .இரண்டு கோயில்களும் ஒரே அளவில் உள்ளன. அவற்றின் கருவறைகள் கிழக்கு நோக்கி சூரிய உதயத்தை எதிர்கொள்ளும் வகையில் திறக்கப்படுகின்றன . ஹோய்சலேஸ்வரர் (அரசர்) மற்றும் சாந்தலேஸ்வரர் (ராணி சாந்தலா தேவி) சன்னதியில் சிவலிங்கம் உள்ளது. ஹலபேடு கோயிலின் இரட்டைக் கோயில்கள் ஹோய்சலேஸ்வரர் மற்றும் சாந்தளேஸ்வரருக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இந்த சிவலிங்கங்கள் ஆண்பால் மற்றும் பெண்பால் அம்சங்களால் பெயரிடப்பட்டுள்ளன. ராஜா ஆண்மை வடிவத்திற்கு பிரார்த்தனை செய்ததாகவும், ராணி பெண்மைய வடிவத்திற்கு பிரார்த்தனை செய்ததாகவும் கூறப்படுகிறது. இதன் மூலம் அக்காலகட்டத்தில் இறை வழிபாட்டில் நிலவிய பாலின சமத்துவ நிலையை அறிய முடிகிறது.

கோயில் சிற்பம் கற்றுத்தரும் அறிவியல்:

தொன்மைக்கால முதல் அண்மைக்காலம் வரை மனிதரின் நாகரீகத்தையும், பண்பாட்டையும் ஓரளவு முழுமையாக உணர்வதற்கு சிற்பக்கலை உதவும் என்பதில் ஐயமில்லை. ஹொய்சாளர்கள் நமக்கு அந்த சிற்பங்கள் மூலம் பல கருத்துக்களை கூறுகின்றனர் .அந்த சிற்பங்கள் மூலம் பழங்காலத்தில் போரின்போது தொலைநோக்கியை பயன்படுத்தி பண்டைய அறிவியல் தொழில்நுட்பத்தையும், ராஜாவிற்கு ஒரு சிவலிங்கம் ராணிக்கு ஒரு சிவலிங்கம் வைத்து பாலின சமத்துவத்தையும் பேணியதையும் , இயற்கையை காப்பாற்ற இறைவனை முன்வந்து நிற்பான் என்பதையும் ஹலபேடு கோயில் சிற்பங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

**முடிவுரை**

கோயில்களில் உள்ள சிற்பங்கள் நாம் அன்றாடம் கடைபிடிக்க வேண்டியவற்றை நேர்முகமாகவும் மறைமுகமாகவோ நமக்கு தெரிவிக்கின்றன.ஹலபேடு சிற்பங்கள் புலப்படுத்தும் அறிவியல் வாழ்க்கை நெறிமுறைகள் ஆகியவற்றை ஆய்வு செய்வதன் மூலம் சிற்பக்கலையின் மகத்துவத்தை அறிய பெற்றோம். சிற்பக்கலை சிறப்பு வாய்ந்தது என்பதற்கு இக்கட்டுரை ஒரு சான்றாகும்.

**துணைநூற்பட்டியல்:**

1.கோயில்களின் வரலாறு, கலை, பண்பாடு, வரலாறும் கூட(2018)
2. .Hoyleshwara Halebidu temple,The revolving compass(2018)

3. ஆய கலைகள் 64.. அது தெரியும்.. ஆனா என்னென்னு தெரியுமா.. வாங்க பார்க்கலாம்(2020)

4.Hoysaleswara Temple Halebid,Culture India(2019)

5.எங்கள் ஆன்மீகம் : சிற்பங்களின் ஆலயம் !(2020)

6.அருள்மிகு ஹொய்சாளேஸ்வரர் திருக்கோவில் (2023)

7.Halebidu Hoysaleswara Temple – An amazing example of Hoysala architecture (2023)

8.Hoysaleswara Temple,Halebid(2017)

9.Halebidu ( Halebid),wonder of Hoysala architecture (2015)

10.Belur and Haley: The ancient temples of Hoysala Empire (2015).